# கலைஞரும் நானும்

74

“நிர்வாகத் திறமையில் சிகரம் தொட்ட ஒருவர், கலை இலக்கியத்தில் ஆழ்ந்த ஞானம் உள்ளவராகவும் இருப்பது மிகவும் அபூர்வம். தமிழ்நாட்டின் முதலமைச்சர் கலைஞர் அவர்களை நான் சந்தித்து, உரையாடக் கிடைத்த வாய்ப்புகள் என் வாழ்வில் கிடைத்த அபூர்வ தருணங்கள்”, என நினைவுகளைப் பகிர்கிறார் கலை இலக்கிய விமர்சகர் இந்திரன்.



## “ஆதாம் ஏவாளிடம் ஆப்பிளைக் கொடுங்கள்..!”

கலை இலக்கிய விமர்சகர் இந்திரன்

2000-வது ஆண்டில், கன்னியாகுமரியில் ‘அய்யன் திருவள்ளுவர் சிலை’ திறப்பின்போது ஒரு மாபெரும் குறளோவியக் கண்காட்சி அமைக்க வேண்டும் என்கிற பணியை அளித்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அந்தப் பணியை, அவர் மகிழும் வகையில் செய்து முடித்தது மெய்யாகவே சிறந்த அனுபவங்களாக என்னிடம் இன்றைக்கும் நினைவில் இருக்கின்றன.

1999-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இருக்கும். ஐ.ஏ.எஸ் அதிகாரி இறையன்பு அவர்களின் அழைப்பின்பேரில், அவரைச் சென்று சந்தித்தேன். அப்போது வங்கி அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டே, கலைப் பண்பாட்டுத் துறை மூலம் நடத்தப்பட்ட ‘நுண்கலை’ பத்திரிகையின் கௌரவ ஆசிரியராகவும் இருந்தேன். இறையன்பு அவர்களோ, உடனடியாக முதலமைச்சர் கலைஞரைச் சந்திக்க வேண்டும் என அழைத்துச் சென்றார்.



கலைஞர் அதற்கு முன் என்னைக் குறித்து அறிந்து வைத்திருந்ததால், நேரடியாகவே விஷயத்துக்கு வந்துவிட்டார். ‘குமரிக் கடலில், திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழாவின்போது, குறளுக்கு என தனியாக ஓவியக் கண்காட்சி நடத்தவேண்டும். அதற்காக, திருக்குறளின் ஒவ்வொரு அதிகாரத்தில் இருந்தும் ஒரு குறளைத் தேர்வு செய்து, அதை ஓவியமாக வரைய வேண்டும். எந்தக் குறள், எந்த மாதிரியான ஓவியம் என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்’ என, அந்த வேலைக்கு ஒதுக்கப்பட்ட தொகையும் குறிப்பிட்டு உரிய நேரத்துக்குள் வேலையைச் செய்து முடிக்கவும் என்றார்.

எனக்கு வியப்புத் தாளவில்லை. ‘இம்மாபெரும் பணிக்கு என்னை எப்படித் தேர்வு செய்தார் ? ’ என்ற கேள்வி எழுந்தது. பின்னர்தான், ‘நுண்கலை’ இதழைத் தொடர்ந்து வாசிப்பவர் என்பது தெரிந்தது.

### வள்ளுவர் தாங்க மாட்டார் !

அந்தப் பணிக்காக, பேராசிரியர் அன்பழகன் தலைமையில், கலை பண்பாட்டுத் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்களுடன், முக்கிய ஓவியர்களை அழைத்து கூட்டம் நடத்தினோம். ஓவியர்கள் ஓவியங்களுக்காகக் கேட்ட தொகை மிகையாக இருந்தது. “வள்ளுவர் தாங்க மாட்டார்” என பேராசிரியரே சிலேடையாகச் சொல்லும் வகையில் அந்தக் கூட்டம் அமைந்தது. அப்போது, சென்னையில் உள்ள ஓவியர்கள் மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும் உள்ள எல்லா முக்கிய ஓவியர்களையும் ஈடுபடுத்த வேண்டும் என மனதிற்குள் தீர்மானம் செய்து கொண்டேன்.

குறிப்பாக 133 குறளுக்கும் 133 ஓவியர்களை ஈடுபடுத்தினால், 133 பாணி ஓவியங்கள் காட்சிப்படுத்தப்படும். அதன்மூலம், இந்தியாவிலேயே அப்படியான ஓவியக் கண்காட்சி அதற்குமுன் நடைபெறவில்லை என்கிற புகழ் பெறும் என நினைத்தேன். புதுடெல்லியில் உள்ள நவீன ஓவியங்களுக்கான தேசியக் கலைக்கூடம்கூட 133 ஓவியங்களை ஒரே கூரையின் கீழ், அதுவரை காட்சிப்படுத்தியதில்லை.

ஓவியப் பணிகள் எந்த அளவில் இருக்கிறது, என அறிவதற்காக இரண்டாவது முறை கலைஞர் அழைத்திருந்தார். அந்தச் சந்திப்பின்போதுதான், 133 ஓவியர்களை ஈடுபடுத்தலாம் என்கிற யோசனையை அவரிடம் கூறினேன். மிகவும் மகிழ்ச்சி அடைந்தவர், ‘ஓவியர்களை எப்படித் தேர்வு செய்வீங்க’ என விளக்கத்தையும் கேட்டுக்கொண்டார். அத்துடன், எனது மற்றொரு யோசனையாக, ‘தமிழ் ஓவியர்கள் மட்டுமல்லாமல், கன்னடம், மலையாளம், மராத்தி ஓவியர்களிடமும் சொல்லி குறள் ஓவியங்களைப் படைக்கச் சொல்லலாம். அதன்மூலம் திருக்குறளை மொழியைக் கடந்து கொண்டு செல்லலாம் அய்யா’’ என்றேன். அந்த யோசனையை “அட” வரவேற்றார்.

நான் சோழமண்டலம் ஓவியர் கிராமத்து மலையாள ஓவியர் டக்ளஸ், மராத்தி ஓவியர் பகவான், தெலுங்கு ஓவியர் தோட்டா தரணி போன்ற பலரைப் பற்றியும் விளக்கினேன்.

**முக்கிய விருந்தினர்களுக்கு அந்த ஓவியங்களின் பொருளைப் பன்மடங்கு பொருண்மையுடன் அவர் விளக்கினார்.**

கலைஞர் எனது தேர்வுகளை ஆமோதித்து ஊக்கப்படுத்தினார்.

### கலையில் சமூகநீதி

அந்த ஓவியங்களை ரசித்து, சிலாகித்து, சமூக, பண்பாட்டு ரீதியான திருத்தங்களை அவருக்கே உரிய நகைச்சுவை உணர்வுடன் சொன்ன பாங்கு, என்னை வியப்பில் ஆழ்த்தியது. ஓவியங்கள் தீட்டத் தீட்ட வாரம் இருமுறை தலைமைச் செயலகம் சென்று கலைஞரிடம் காட்டத் தொடங்கினோம். தலைக்குமேல் வேலை இருந்தாலும், ஓவியங்களைப் பார்க்க நேரம் ஒதுக்குவார். உடன் வரும் அதிகாரிகளிடம் அந்த ஓவியங்களைக் காட்டி விளக்கம் கேட்பார். அந்த இடத்தில், தான் ஒரு முதலமைச்சர் என்பதாகவே காட்டிக் கொள்ளமாட்டார்.

ஓர் ஓவியத்தில், மலைமேலிருந்து கீழே விழப் போகும் அரசனை அரசி தடுப்பதுபோல காட்சி. அரசியின் கை வரையப்பட்ட விதத்தைப் பார்த்து “அது தடுக்கும் கையாக இல்லையே, தள்ளிவிடும் கைபோல உள்ளதே” என நகைத்ததை என்னால் மறக்க முடியாது.

‘குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி’ என்கிற குறளுக்கு ஓர் ஓவியர்,‘கண்ணகி மதுரையை எரித்த கதையை’ வரைந்திருந்தார். அதைப் பார்த்தவர் அதிகாரிகளிடம் அர்த்தம் கேட்கிறார்.

“சான்றோர்களாக இருப்பவர்கள் ஒரு நிமிடம் கோபப்பட்டால்கூட மற்றவர்கள் அதைத் தாங்க முடியாது. கண்ணகி அப்படித்தான் மதுரையை எரித்தார்” என்கிற விளக்கத்தை அவர்கள் அளித்தனர்.

அந்த விளக்கத்தை மேலும் சிறப்பாக்கி, “உயர்ந்த குணம் கொண்டவர்களின் கோபத்தை எதிரில் இருப்பவர்கள் தாங்க மாட்டார்கள் என்று அர்த்தம் இல்லை, சான்றோர் என்பவர்கள், கோபத்தை ஒருகணம் தாண்டி தங்களிடம் இருக்க விட மாட்டார்கள் என்று ஒரு குறிப்பும் உள்ளது. எனது கோபம் உடனே தணியா விட்டால், நீங்கள் எவ்வளவு கஷ்டப்படுவீர்கள்’’ என்றும் சொல்லி நகைமுகம் காட்டினார்.

வேறோர் ஓவியர் போர்க்களக் காட்சியைத் தீட்டியிருந்தார். அதைப் பார்த்த கலைஞர்,“ஏற்கெனவே நாட்டில் வன்முறை தாங்க முடியலை, இந்த நேரத்தில் ஓவியத்தில் வன்முறையா? ஏன் இவ்வளவு உடல்கள் ? கொஞ்சம் உடல்களை அப்புறப்படுத்துங்க” என இலக்கிய நயத்துடனே குறிப்பிட்டார்.

ஒவ்வொரு ஓவியத்தையும் நுட்பமாகக் கவனித்து, கலை ரீதியாக மட்டுமல்லாமல் , சமூகநீதி, அரசியல் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்து ஆலோசனைகளைக் கூறினார்.

காமத்துப் பால் குறள் ஒன்றை, ஆதாம் ஏவாள் என குறியீட்டு ரீதியாக ஓர் ஓவியர் வரைந்திருந்தார். அதை பார்த்த கலைஞர், “இந்த ஓவியத்தைப் பாமர மக்களும்தானே பார்க்கப் போகிறார்கள்? பார்த்த உடனே புரிகிற மாதிரி ஆதாம் ஏவாள் கையில் ஒரு ஆப்பிளைக் கொடுக்கலாமே ? என்றார்.

இப்படி, அவரே பாதி ஓவியர்போல பார்த்துப் பார்த்து ஓவியங்களை உள்வாங்கினார். சில ஓவியங்களின் அர்த்தங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வார். அவரைச் சந்தித்து விட்டுத் திரும்பும் ஒவ்வொரு நாளும் என்னுடைய கலை இலக்கியப் பார்வையில் புதிய பல மாற்றங்களை அவர் ஏற்படுத்தி இருப்பார்.

### அரங்கில் அதிகாலை

கண்காட்சி நடக்கும் நாளில், முதல் நாள் இரவு 2 மணிவரை கண்காட்சி அரங்கில் வேலைகளை முடித்துவிட்டு வந்து படுக்கிறோம். “கண்காட்சியைப் பார்க்க கலைஞர் வருகிறார்” என 3 மணிக்கு அழைப்பு வருகிறது. நான் அங்கு சென்ற நேரத்தில், காலை நடைப்பயிற்சியாக வந்த கலைஞர் அரங்கில் நுழைந்தார்.

அனைத்து ஓவியங்களையும் மீண்டும் ஒருமுறை பார்த்ததுடன், நவீன ஓவியங்களுக்கான விளக்கங்களையும் கேட்டுக் கொண்டார். ஒரு முதலமைச்சராக இருப்பவர், தன்னுடைய ஏராளமான வேலைகளுக்கு இடையில், ஓவியங்களை மீண்டும் மீண்டும் ரசித்தது என்னை வியப்பில் ஆழ்த்தியது.

காலையில், கண்காட்சி திறப்பு விழா. கலைஞருடன் தமிழ்நாட்டின் ஆளுமைகள் பலரும் ஓவியங்களைப் பார்வையிடுகின்றனர். அவர்களுக்கு அந்த ஓவியங்களின் பொருளை பன்மடங்கு பொருண்மையுடன் அவர் விளக்கியபோது, அவருக்குள் இருந்த கலை குறித்த கனவு வெளிப்பட்டதைப் பார்த்தேன்.

அய்யன் திருவள்ளுவருக்கு சிலை அமைப்பது, அவரது மாபெரும் கனவுகளில் ஒன்று. அதற்கான பணிகளில் அவர் காட்டிய முனைப்பு, அதையொட்டிய ஒவ்வொன்றையும் கவனத்தில் கொண்ட விதம் எல்லாம், அவர் மாபெரும் பண்பாட்டு மீள்பார்வையை நிறுவியவர் என்பதற்கான சான்று.

**அந்த ஓவியக் கண்காட்சியின் அமைப்பாளர் என்ற பொறுப்பில் நானும் ‘வான் புகழ்’ வள்ளுவரின் திருப்பாதத்தில் ஓவிய மலர்களைத் தூவ வாய்ப்பளித்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அவரோடு கழித்த ஒரு சில பொழுதுகள் என் மனதில் ஒரு வரலாற்று மணிமண்டபமாக இன்றைக்கும் வாழ்கிறது.**

....பகிர்வார்கள்

### வளமான வகுப்பறை! வளமான தலைமுறை!

இது வெளிநாட்டுப் பள்ளியின் வகுப்பறை அல்ல. தமிழ்நாட்டில், புதுக்கோட்டை மாநகராட்சியில் வார்டு எண்: 22-இல் இருக்கும் அங்கன்வாடி வகுப்பறை. மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லாவின் முன்னெடுப்பில் நாடாளு மன்றத் தொகுதி நிதியில் இந்தச் சீரமைப்பு நடைபெற்றுள்ளது.



சமீபத்தில், நாங்கள் மலேசியா சென்றிருந்தபோது அங்கு ‘தமிழ்த் தோட்டப் பள்ளி’யினைப் பார்வையிட்டோம். மழலை வகுப்பறைகள் அட்டகாசமாக இருந்தன. வெளிநாடுகளில் உள்ள தொடக்கப்பள்ளிகளில், குறிப்பாக பள்ளிக்குள் நுழையும் குழந்தைகளின் வகுப்புகளைப் பார்க்கவே அவ்வளவு ஆசையாக இருக்கும். வண்ணமயமாகவும் பல விளையாட்டுப் பொருட்களை உள்ளடக்கியதாகவும் இருக்கும்.

இங்கு, கற்பித்தல் முறைகளில் புதுமைகள் ஒரு பக்கம் நிகழ்ந்தாலும், கல்விக்கூடச் சூழல்கள், குறிப்பாக குழந்தைகளுக்குக் கற்பித்தல் முறை, அடிப்படை வசதிகள் மேம்பட வேண்டிய அவசியத்தைப் பலரும் வலியுறுத்தி வருகின்றனர். அந்தத் தேவைகளை அரசு அறிந்துகொண்டது போல, புதுக்கோட்டை அங்கன்வாடி மையம் அமைந்துள்ளது. உள்ளே நுழையும் நுழைவுவாயிலும் அம்சமாக உள்ளது. நாடாளுமன்ற உறுப்பினராக புதுகை அப்துல்லா முன்னெடுத்துள்ள முயற்சி பாராட்டுக்குரியது. தமிழ்நாடு முழுக்க இப்படியாக பள்ளி வகுப்பறைகள், எல்லா வகுப்புகளுக்கும் எல்லா ஊர்களிலும் விரைவில் மலர வேண்டும். வளமான அடுத்த தலைமுறை உருவாக வேண்டும். உருவாக்குவோம்.

– சிறார் எழுத்தாளர் உமாநாத் செல்வன் முகநூல் பதிவு.

### :.ப்ளாஷ்பேக்



வே.பழனியப்பன்

#### 60 கழகத் தோழர்கள்!



‘இந்தியாவின் இருண்ட காலம்’ என்று சொல்லப்பட்ட 1976-ஆம் ஆண்டு பிப்ரவரி 1 அன்று தமிழ்நாடு முழுவதும் கழக நிர்வாகிகளும் தோழர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். அப்போது, தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்க ஆயிரக்கணக்கான கழகச் செயல்வீரர்கள் பேருந்துகளில் சென்னை நோக்கிப் புறப்பட்டுச் சென்று சந்தித்தனர். இந்த நிகழ்வுகள் மாதக் கணக்கில் நடந்து கொண்டிருந்தன. அதன் தொடர்ச்சியாக, 1976-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7 அன்று காரைக்குடியிலிருந்து ஒரு பேருந்து மூலம் 60 தோழர்கள் சென்னைக்குச் சென்று கோபாலபுரம் இல்லத்தில் தலைவர் கலைஞர் அவர்களைச் சந்தித்தோம். என்னுடன் திராவிடர் கழகத்தினர் 4 பேர் வந்தனர். உடன், இடமிருந்து வலமாக சாமி திராவிடமணி, சாமி திராவிடச் செல்வம், இரா.தமிழ்ப் பாண்டியன் மற்றும் ந.மீனாட்சிசுந்தரம்.

– **வே.பழனியப்பன், காரைக்குடி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


#### ஆங்கிலத்தில் இலட்சியக் குரல்!

1950-ஆம் ஆண்டு கழகத்தின் முதல் மாநில மாநாடு நடைபெறுவதற்கு முன்பாகவே, தி.மு.கழகத்தைப் பற்றி ஒரு கொள்கை விளக்கப் புத்தகம் ஆங்கிலத்தில் வெளியிட வேண்டும் என பேரறிஞர் அண்ணா விரும்பினார். அதன் மூலம் பிற மாநிலத்தினரும், பிற நாட்டினரும் கழகத்தின் கொள்கைகளை அறியச் செய்ய வேண்டும் என ஏற்பாடு செய்தார். அந்தப் பணியினை ஆங்கிலப் பத்திரிகை உலகில் இயக்கத்துக்காகப் போராடிய எஸ்.வேதரத்தினம் ஏற்றுக் கொண்டார். ஆங்கிலத்தில் தி.மு.க.வின் இலட்சியக் குரல் முதல் மாநாட்டுக்கு முன்பாக வெளியானது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

510

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.